அதனால் நாங்கள் தண்டனைக்கு ஆளாகவேண்டியிருக்கின்றது என்று சிறிய வியாபாரிகள் முறையீடு செய்கின்றார்கள். சிறிய வியாபாரிகள் தண்டனைக்கு ஆளாகாமல் இருக்குமாறு செய்யவேண்டும். குற்றம் செய்யாதவர்கள் தண்டனைக்கு ஆளாகக்கூடிய நிலைமையும் இருக்கின்றது. அதனை எந்த அளவுக்குத் தவிர்க்கலாம் என்பதுபற்றியும் இந்தத் துறை ஆராயும்.

Sales Tax on Tyres for Trucks and Buses.

* 3 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that there is a great loss of revenue for the State, consequent on the increase in the rate of Sales Tax on Tyres for Trucks and Buses ; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this regard ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்பாக பாண்டிச்சேரி பகுதியிலே அங்குள்ள வரி விதிப்பு விகிதம் குறைவாக இருந்ததால் நம்முடைய மாநிலத்தில் உள்ள அனைத்து பெரிய நிறுவனங்களையும் சார்ந்தவர்கள் அங்கே சென்று டயர்களை வாங்கி வந்து இந்த மாநிலத்தில் உபயோகம் செய்திருக்கின்றார்கள். நம்முடைய வரி விகிதத்திற்கும் அங்குள்ள வரி விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுதான் அதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. பத்திரிகைகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மையா? அதற்குப் பிறகு இந்த வரி விகிதத்தை நம்முடைய மாநிலத்திலே குறைத்திருக்கின்றோமா என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் அதனுடைய வரி 12 சதவிகிதமாக இருந்தது. அந்த 12 சதவிகிதத்தை 9 சதவிகிதமாக இன்று குறைத்திருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல. நம் மாநிலத்தில் இம்மாதிரியாக ஏற்படும் வியாபாரச் சிதறல்களை, Diversion of Trade தடுத்து நிறுத்த வேண்டுமென்று தேவையானபோது வரியைக் குறைத்தும், தேவையானபோது

1984 பிப்ரவரி 17]

வரியை ஏற்றியும் 'டைவர்சன் ஆஃப் டிரேட்' இல்லாமல் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி அரசு ஆலோசித்துச் செய்கின்றது.

முதலிலே 12 சதவிகிதமாக இருந்ததை 9 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம். அதைப்போலவே டயர்கள் மற்றும் ட்யூப்கள் வரி தமிழ் நாட்டில் மட்டுமல்ல, கேரளாவிலே 9 சதவிகிதம், ஆந்திராவிலே 9 சதவிகிதம், கர்நாடகத்திலே 10 சதவிகிதம் என்றும், பாண்டிச்சேரியில் 7 சதவிகிதம் என்றும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் 9 சதவிகிதம் என்று இருக்கின்றது. பாண்டிச்சேரியில் 7 சதவிகிதம் என்று இருப்பதால், நாம் குறைக்க வேண்டும் என்ற தேவையில்லை என்று வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல. இப்போது நாம் வரியைக் குறைத்தனாலேயே சென்ற ஆண்டைவிட இந்த வருவாய் அதிகமாகியிருக்கிறது. அதாவது 1—3—1981 லிருந்து 28—2—1982 வரை, அந்த வருடத்தில் ரூ. 575 லட்சம் வந்திருக்கின்றது. 1—3—1982 முதல் 28—2—1983 வரை அந்த ஒரு ஆண்டில் 657 லட்சம் ரூபாய் வருவாய் வந்திருக்கின்றது. ஆகவே ரூ. 81 லட்சம் அதிகமாக வந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, 12 விழுக்காடு வரியிலிருந்து 9 விழுக்காடாக வரியைக் குறைத்ததே இந்த வருவாய் குறைந்ததனால் என்று அமைச்சர் அவர்கள் பதில் உரைத்தார்கள். நம் மாநிலத்திலுள்ள பேருந்து கார்ப்பரேஷன் எல்லாம், திறம்பட, சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால், நஷ்டம் இல்லாமல் இயங்க வேண்டுமென்றால் வாங்குகின்ற பொருள்கள் விலை குறைவாகத்தான் இருக்க வேண்டும். அந்த முறையிலே நம்முடைய பேருந்து கார்ப்பரேஷன்களைச் சார்ந்தவர்கள் எல்லாம் பொதுவாக பாண்டிச்சேரிக்குப் போய்த்தான் வாங்க வேண்டும். 7 சதவிகிதம் வரியில் டயர்கள் கொள்முதல் செய்ய வேண்டும். அந்த முறையிலே நம்முடைய துறையிலே உள்ள கார்ப்பரேஷன்களுக்குக் கொடுக்கப்படுகின்ற டயர்கள் மற்றும் உதிரிப் பொருள்களுக்காவது அண்டை மாநிலத்திலுள்ள வரி விகிதப்படி அனுமதித்த அந்த விலையில் அவர்களுக்குக் கொடுக்கலாமல்லவா? பொதுவாக இந்த வரிவிதிப்பைப் பொறுத்த வரையில், அண்டை மாநிலங்களுக்கு ஏற்றவாறு வரிவிதிப்பை நாம் குறைத்துக் கொடுப்பதால், அதனால் கொள்முதல் அதிகமாகி, விற்பனைகள் அதிகமாகி, வருவாய் அதிகமாகச் சம்பாதிக்கின்ற வாய்ப்பு இருக்கிறது அல்லவா? அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

[1984 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்கள் என்று பார்க்கின்றபோது, பாண்டிச்சேரியை மட்டும் அண்டை மாநிலமாக எடுத்துக்கொள்வதில்லை. கேரளாவும், ஆந்திரமும், கர்நாடகாவும் இந்த மூன்றையும் பார்க்கிறோம். இந்த மூன்று மாநிலங்களுக்கும் நமக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது. அதுபோலவே பாண்டிச்சேரியில் எவ்வளவு விற்பனை ஆகிறது? நம் மாநிலத்தில் எவ்வளவு விற்பனையாகிறது? 'டைவர்சன் ஆப் டிரேட்', அதாவது வியாபாரச் சந்தையில் என்ன ஆகிறது என்று கணக்கிட்டுப் பார்க்கிறோம். வியாபாரச் சந்தையில் அதிகமானால், அதற்கு ஏற்ப வரியைக் குறைக்கிறோம். பாண்டிச்சேரி மட்டும் 7 சதவிகிதம் என்பதாலேயும் மற்ற மாநிலங்களிலும் நம்முடைய மாநிலத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதாலும், வியாபாரச் சிதறல் மிக அதிகமாக இல்லை என்று அரசுத் துறை கணக்கு சொல்கின்றது. அதைப் பொறுத்து தேவைப்பட்டால் குறைக்கலாம்.

நாமக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* 4. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) நாமக்கல் தாலூகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-50)

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, அப்படி தாலூகா இரண்டாகப் பிரிக்கப்படுகிறபோது, பிரிக்கப்படும் தாலூகாவிற்கு நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பெயரையோ தீரன் சென்னிமலை, எங்கள் பகுதியைச் சேர்ந்த வீரமலை அவர்கள் பெயரையோ வைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆளுநர் உரையில் செய்யப்பட்டிருக்கிற அறிவிப்புகளிலிருந்து மாவட்டங்களுக்குப் பெயர்கள் வைக்கிறபோது, எப்படிப் பெயர்கள் வைக்கிறோம் என்று உறுப்